நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 904/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாதேசன் |
| தந்தை / கணவர் பெயர் | : | நாச்சிமுத்து |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 54 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 24–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.29PM.

1. நான் தற்போது மேட்டூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். 12.08.2025ம் தேதி காலை 7.00 மணி அளவில் மேட்டூர் காவல் உதவி ஆய்வாளர் பிரசாந்த் மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் 1840 செந்தில்குமார் என்பவருடன் மதுவிலக்கு வேட்டை சம்பந்தமாக மேட்டூர்

பஸ்நிலையம், ஓர்க்சாப், மற்றும் காவேரிபாலம் ஆகிய இடங்களில் ரோந்து செல்லும்போது காவேரிபாலம் மாரியம்மன் கோவில் பின்புறம் அங்கு கட்டை பையுடன் உட்கார்ந்து இருந்த நபர் எங்களை பார்த்ததும் ஓடி எத்தனித்தபோது அவரை பிடித்து விசாரிக்க தன் பெயர் சந்திரன் த/பெ. கருமலை எனவும் கூறினார்.

2. பின்பு அவரை விசாரிக்க முன்னுக்கு பின் சொல்ல பின்பு அவர் வைத்திருந்த கட்டை பையை பரிசோதித்த போது அதில் Black pearl 5 பாட்டில்களும் பிராந்தியும், Express பிராந்தி 5 பாட்டில்களும் அரசு முத்திரையுடன் இருந்தன. பின்பு அவர்களிடம் விசாரிக்க தலா அரசு மதுபானத்தை வாங்கி அதிக விலைக்கு விற்பனைக்காக வைத்திருந்தாக கூறியதை அடுத்து சம்பவ இடத்தில் 7.15 மணிக்கு எதிரியை காவல் உதவி ஆய்வாளர் கைது செய்தார்.

3. பின்பு அவர் வைத்திருந்த மேற்கண்ட பிராந்தி பாட்டில்கள் 10யும் மகஜரில் கைப்பற்ற சம்பவ இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் காலை 7.30 மணிக்கு என்னையும், உடன் வந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் 1840 செந்தில்குமாரையும் மகஜர் சாட்சிகளாக கையொப்பம் இட்டு பின்பு எதிரி மற்றும் தடயங்களுடன் நிலையம் வந்து மேட்டுர் காவல் நிலைய குற்ற எண் 427/2025 சட்டப்பிரிவு 4(1)(c)ஆக வழக்கு பதிவு செய்ய காவல் உதவி ஆய்வாளருக்கு நான் துணையாக இருந்தேன். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். ( **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இதுசம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நானும், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமார் ஒரு வாகனத்திலும், உதவி ஆய்வாளர் பிரசாந்த் மற்றொரு இருச்சக்கர வாகனத்திலும் சம்பவயிடத்திற்கு சென்றோம். நேராக காவல் நிலையத்தில் இருந்து கிளம்பி மேட்டுர் பேருந்துநிலையம் வழியாக ஓர்க்ஷாப் கார்னர் சென்று பிறகு சம்பவயிடமான காவேரி பாலம் சென்றோம்.

2. சம்பவயிடமான மாரியம்மன்கோவில் அருகில் நிறைய வீடுகள் உள்ளது. மாரியம்மன் கோவில் காவேரி பாலம் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். எங்களை பார்த்ததும் எதிரி ஓடமுற்பட்டார். நாங்கள் மூவரும் சேர்ந்துதான் எதிரியை சுற்றி வளைத்து பிடித்தோம்.

3. எதிரியிடம் கட்டைப்பையில் வைத்திருந்த முதல் விசாரணையில சொன்ன 10 பாட்டில்களை கைப்பற்றினோம். காவல் நிலையத்தில் இருந்து இருச்சக்கர வாகனத்தினை மட்டும்தான் எடுத்துச்சென்றோம். கைப்பற்றுதல் மகசரில் சம்பவயிடத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தோம். கைப்பற்றுதல் மகசரை காவல் உதவி ஆய்வாளர் தான் காவல் நிலையம் சென்று பிரிண்ட் எடுத்துக்கொண்டு வந்தார்.

4. இந்த வழக்கில் அனைத்து ஆவணங்களையும் காவல் உதவி ஆய்வாளர்தான் தயார் செய்தார். தனிநபர் சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் விசாரிக்கவில்லை. எதிரியையும், கைப்பற்றப்பட்ட பொருட்களையும் நேராக காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தோம். கைப்பற்றப்பட்ட பொருட்களை பொருத்து அழித்தல் மகசர் எதுவும் நாங்கள் தயார் செய்யவில்லை.

5. நாங்கள் உண்மையில் சம்பவயிடம் சென்றிருந்தால் ஆள்நடமாட்டம் உள்ள பகுதியில் தனிநபர் சாட்சிகளை வைத்து மதுபான பாட்டில்களை கைப்பற்றியிருப்போம் என்றாலும் புள்ளிவிவரக்கணக்கிற்காக வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றாலும் தவறாக பதிவுசெய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 04.50 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 904/2025

## P.W.2 -ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | ராமராஜ் |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | - |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026-ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 24-ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:- 04.51PM.

1. நான் தற்போது மேட்டூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். 12.08.2025ம் தேதி காலை 7.00 மணி அளவில் மேட்டூர் காவல் உதவி ஆய்வாளர் பிரசாந்த் மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாதேஷ் என்பவருடன் நானும் மதுவிலக்கு வேட்டை சம்பந்தமாக மேட்டூர் பஸ்நிலையம், ஒர்க்சாப், மற்றும் காவேரிபாலம் ஆகிய இடங்களில் ரோந்து செல்லும்போது காவேரிபாலம் மாரியம்மன் கோவில் பின்புறம் அங்கு கட்டை

பையுடன் உட்கார்ந்து இருந்த நபர் எங்களை பார்த்ததும் ஓடி எத்தனித்தபோது அவரை பிடித்து விசாரிக்க தன் பெயர் சந்திரன் த/பெ. கருமலை எனவும் கூறினார்.

2. பின்பு அவரை விசாரிக்க முன்னுக்கு பின் சொல்ல  பின்பு அவர் வைத்திருந்த கட்டை பையை பரிசோதித்த போது அதில் Black pearl 5 பாட்டில்களும் பிராந்தியும், Express பிராந்தி 5 பாட்டில்களும் அரசு முத்திரையுடன் இருந்தன. பின்பு அவர்களிடம் விசாரிக்க தலா அரசு மதுபானத்தை வாங்கி அதிக விலைக்கு விற்பனைக்காக வைத்திருந்தாக கூறியதை அடுத்து சம்பவ இடத்தில் 7.15 மணிக்கு எதிரியை காவல் உதவி ஆய்வாளர் கைது செய்தார்.

3. பின்பு அவர் வைத்திருந்த மேற்கண்ட பிராந்தி பாட்டில்கள் 10யும் மகஜரில் கைப்பற்ற சம்பவ இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் காலை 7.30 மணிக்கு என்னையும், உடன் வந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் 1840 செந்தில்குமாரையும் மகஜர் சாட்சிகளாக கையொப்பம் இட்டு பின்பு எதிரி மற்றும் தடயங்களுடன் நிலையம் வந்து மேட்டுர் காவல் நிலைய குற்ற எண் 427/2025 சட்டப்பிரிவு 4(1)(c)ஆக வழக்கு பதிவு செய்ய காவல் உதவி ஆய்வாளருக்கு நான் துணையாக இருந்தேன்.  கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். ( **கைப்பற்றுதல் மகஜர் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இதுசம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நானும், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மாதேசன் ஒரு வாகனத்திலும், உதவி ஆய்வாளர் பிரசாந்த் மற்றொரு இருச்சக்கர வாகனத்திலும் சம்பவயிடத்திற்கு சென்றோம். நேராக காவல் நிலையத்தில் இருந்து கிளம்பி மேட்டுர் பேருந்துநிலையம் வழியாக ஒர்க்ஷாப் கார்னர் சென்று பிறகு சம்பவயிடமான காவேரி பாலம் சென்றோம்.

2. சம்பவயிடமான மாரியம்மன்கோவில் அருகில் நிறைய வீடுகள் உள்ளது.

மாரியம்மன் கோவில் காவேரி பாலம் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். எங்களை பார்த்ததும் எதிரி ஓடமுற்பட்டார். எதிரியை சிறப்பு உதவி ஆய்வாளர் மாதேசன் துரத்தி பிடித்தார்.

3. எதிரியிடம் கட்டைப்பையில் வைத்திருந்த முதல் விசாரணையில சொன்ன 10 பாட்டில்களை கைப்பற்றினோம். காவல் நிலையத்தில் இருந்து இருச்சக்கர வாகனத்தினை மட்டும்தான் எடுத்துச்சென்றோம். கைப்பற்றுதல் மகசரில் காவல் நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தோம். சம்பவயிடத்தில் விவரங்களை குறிப்பு எடுத்துவந்து கைப்பற்றுதல் மகசரை காவல் உதவி ஆய்வாளர் தான் காவல் நிலையம் நிலையம் வந்து தயார் செய்து பிரிண்ட் எடுத்தார்.

4. இந்த வழக்கில் அனைத்து ஆவணங்களையும் காவல் உதவி ஆய்வாளர்தான் தயார் செய்தார். தனிநபர் சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் விசாரிக்கவில்லை. எதிரியையும், கைப்பற்றப்பட்ட பொருட்களையும் நேராக காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தோம். கைப்பற்றப்பட்ட பொருட்களை பொருத்து அழித்தல் மகசர் எதுவும் நாங்கள் தயார் செய்யவில்லை.

5. நாங்கள் உண்மையில் சம்பவயிடம் சென்றிருந்தால் ஆள்நடமாட்டம் உள்ள பகுதியில் தனிநபர் சாட்சிகளை வைத்து மதுபான பாட்டில்களை கைப்பற்றியிருப்போம் என்றாலும் புள்ளிவிவரக்கணக்கிற்காக வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றாலும் தவறாக பதிவுசெய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 04.55 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**